2003 நவம்பர் 6]

63—

தடுப்பணை கட்டுதல்

***27639—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தி யூனியனில் மயில்ரங்கத்திற்கு அருகில் மூலத்துறை எனும் இடத்தில் அமராவதி ஆற்றில் தடுப்பணை கட்டி அங்கிருந்து தாதம்பாளையம் ஏரி வரை தண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரவக்குறிச்சி தொகுதியிலுள்ள பரமத்தி ஒன்றியத்தில் மயில்ரங்கத்திற்கு அருகில், மூலத்துறை என்னுமிடத்தில் அமராவதி ஆற்றில் தடுப்பணை ஒன்று கட்டினால், அங்கிருந்து தண்ணீர் ஓடந்தூர் ஊராட்சி, கூடலூர் கிழக்கு, மேற்கு, சின்னதாராபுரம், சூடாமணி ஊராட்சி, எலவனூர், தும்பிவாடி, குஞ்சைக்காடைக்குறிச்சி, வடகரை முதலிய பல ஊர்களின் வழியில் பெரியதாதம்பாளையம் என்னும் ஊரிலுள்ள 40 ஏக்கர் ஏரியில் விழச்செய்யும். அந்நீர் வரும் வழியிலுள்ள பல ஊராட்சிகளின் ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். எனவே இதை மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது இந்தத் தடுப்பணை கட்டும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நிறைவேற்றிட அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதி கபரமத்தி யூனியன், மயில்ரங்கத்திற்கு அருகில் மூலத்துறை என்னும் இடத்தில் அமராவதி ஆற்றில் தடுப்பணை கட்டி, அங்கிருந்து தாதம்பாளையம் ஏரி வரை தண்ணீர் கொண்டு

செல்லும் திட்டம் இல்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அமராவதி ஆற்றின் குறுக்கே மயில்ரங்கத்திற்கு அருகில் மூலத்துறை என்னும் இடத்தில் தடுப்பணை அமைத்து தாதம்பாளையம் ஏரி வரை கால்வாய் அமைத்து தண்ணீர் கொண்டு செல்ல மட்ட அளவுகள் அனுமதிக்கவில்லை. இதனால் அமராவதி ஆற்றில் நஞ்சைதலையூர் என்னும் இடத்தில் ஏற்கெனவே உள்ள அணையின் மேல் மட்டத்திலிருந்து 24.50 கிலோமீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்டி, தண்ணீரை சின்னமுத்தம்பாளையம் ஏரி வரை கொண்டு செல்வதற்கும், அங்கிருந்து இயற்கையாக அமைந்துள்ள ஓடையின் வழியாக தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, இடையிலுள்ள ஆறு, குட்டைகள் மற்றும் ஏரிகளை நிரப்பி, இறுதியாக பெரிய தாதம்பாளையம் ஏரியில் நீர் நிரப்பி, 2,313 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்க முதல்நிலை அறிக்கை மதிப்பீடு ரூபாய் 1,210 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-10

மேலும் இத்திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக, அமராவதி ஆற்றின் நஞ்சைகாலக்குறிச்சி என்னும் இடத்திலிருந்து 13 கிலோமீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்டி, தண்ணீரை நேரடியாக பெரியதாதம்பாளையம் ஏரிக்குக் கொண்டு சென்று, 828 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்க முதல்நிலை அறிக்கை மதிப்பீடு ரூபாய் 420 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரு மதிப்பீடுகளும் தலைமைப் பொறியாளர் (திட்டம், உருவாக்கம்) அளவில் பரிசீலனையில் உள்ளது. உரிய பரிசீலனைக்குப் பின் சாத்தியக்கூறுகள் இருப்பின், வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பகுதி மக்களுக்குப் பாசன வசதி கிடைக்கின்ற வகையில் மாற்றுத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு.பெ. சாமிநாதன்.

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மயில்ரங்கம் என்ற அந்தக் கிராமம் வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சியைச் சேர்ந்த அது. என்னுடைய தொகுதியிலே வருகிறது. அந்த இடத்திலே தடுப்பணை கட்டுவது

2003 நவம்பர் 6]

சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே விளக்கம் அளித்திருக்கிறார்கள். அந்த இடத்திலே பாசனத்திற்காக தடுப்பணை கட்டுவதற்கு இப்போது நிதியாதாரமோ, வாய்ப்புகளோ இல்லையென்றாலும், தண்ணீர் தேங்கி செல்லக்கூடிய அளவிலே ஒரு தடுப்பணை அமைக்க வேண்டும், அதேநேரத்திலே அந்தப் பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கை அந்த இடத்திலே, ஒரு பாலம் அமைப்பதாகும். நம்முடைய அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல, -அந்தப் பகுதியையும், ஈரோட்டையும் குறிப்பாக, மதுரைக்குக்கூட அந்த வழி குறுகிய சாலை- குறுக்குச் சாலை வழியாக அமைத்தால், இதன் மூலம் எரிபொருள்கூட மிச்சமாகக்கூடிய அளவிலே அமைய வாய்ப்பு உள்ளது. எனவே அந்தத் தடுப்பணையை தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய அளவிலும், அதே நேரத்திலே அதில் ஒரு பாலம் அமைத்துத் தருவதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின்படி அங்கு இருபயன்கள் தரும் வகையில் பாலம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

64—

வருவாய்க் கோட்டம்

***35098— திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய்க் கோட்டம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?